23.09.2024

அசல் வழக்கு எண்: 293/2009

வா.சா.1 சாட்சி ஜெயராஜ் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி வாதி தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி

எனது பெயரில் உள்ள பட்டா பாஸ் புத்தகத்தை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**ஜெயராஜ் பெயரில் உள்ள பட்டா பாஸ் புத்தகம் வா.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

2ம் வாதி பெயரில் உள்ள பாட்டா பாஸ் புத்தகத்தை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**2ம் வாதி உலகணன் பெயரில் உள்ள பட்டா பாஸ் புத்தகம் வா.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

3ம் வாதி பெயரில் உள்ள பாட்டா பாஸ் புத்தகத்தை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**3ம் வாதி சுப்பையா பெயரில் உள்ள பட்டா பாஸ் புத்தகம் வா.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

4ம் வாதி பெயரில் உள்ள பாட்டா பாஸ் புத்தகத்தை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**4ம் வாதி முத்துராமலிங்கம் பெயரில் உள்ள பட்டா பாஸ் புத்தகம் வா.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

எனது பெயரில் செலுத்தப்பட்ட கிஸ்தி ரசீதை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**ஜெயராஜ் பெயரில் உள்ள 06.04.2007ம் தேதியிட்ட கிஸ்தி ரசீது வா.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

2ம் வாதி பெயரில் செலுத்தப்பட்ட கிஸ்தி ரசீதை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**27.03.2006ம் தேதியிட்ட கிஸ்தி ரசீது வா.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

3ம் வாதி பெயரில் செலுத்தப்பட்ட கிஸ்தி ரசீதை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**08.05.2007ம் தேதியிட்ட கிஸ்தி ரசீது வா.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

4ம் வாதி பெயரில் செலுத்தப்பட்ட கிஸ்தி ரசீதை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**19.04.2001ம் தேதியிட்ட கிஸ்தி ரசீது வா.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

பொன்னமங்கலம் கிராம பொது மக்கள் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பிய மனுவை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**மேற்படி மனுவில் கையொப்பம் எதுவும் இல்லை என்று குறியீடு செய்வதற்கு பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது. மேற்படி ஆவணம் கை நகல் என்பதாலும் மேற்படி ஆவணத்தின் உண்மை தன்மை குறித்து ஆவணத்தின் மதிப்பீட்டலின் போது முடிவு செய்யப்படும் என்பதாலும் பொன்னமங்கலம் கிராம பொது மக்கள் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பிய மனு வா.சா.ஆ. 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

பொன்னமங்கலம் கிராம பொது மக்கள் அமைச்சருக்கு அனுப்பிய மனுவை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**பொன்னமங்கலம் கிராம பொது மக்கள் அமைச்சருக்கு அனுப்பிய மனு வா.சா.ஆ. 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

தாவா சொத்தை காட்டகூடிய புகைப்படங்களை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**புகைப்படங்கள் (20எண்ணம்) வா.சா.ஆ. 11 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது.**)

மேற்படி புகைப்படங்கள் எடுக்கப்பட்டதற்கான ரசீதை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**புகைப்படங்களுக்கான ரசீது வா.சா.ஆ. 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

மேற்படி புகைப்படங்களுக்கான குறுந்தகடை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**குறுந்தகடு வா.சா.ஆ. 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

வாதிகள் திருமங்கலம் உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த கேவியட் மனுவின் நகலை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**திருமங்கலம் உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த கேவியட் மனு நகல் வா.சா.ஆ. 14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

பிரதிவாதிகள் உசிலம்பட்டி உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த கேவியட் மனுவின் நகலை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**உசிலம்பட்டி உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த கேவியட் மனு நகல் வா.சா.ஆ. 15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

நீதிமன்ற ஆணையரின் அறிக்கையை எனது தரப்பு ஆவணமாக குறியீடு செய்கிறேன். (**நீதிமன்ற ஆணையரின் அறிக்கை நீ.ம.சா.ஆ. 1ஆகவும், வரைபடம் நீ.ம.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகின்றன.**)

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி மேலும் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக இந்த வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)